ஞாலகுருவின் படைப்புக்கள்

# ஞானத் திரு விளக்க ஞானத் திருவோலை



கிறித்தவர், முகமதியர், புத்தர், சமணர் ..... என்று வேற்று மதங்களில் உள்ள தமிழர்கள் தாங்கள் தமிழர்களே என்பதை மறந்து விட்டனர். யார் எந்த மதத்தில் இருந்தாலும் தமிழர்களே! என்ற பற்றுணர்வு ஏற்படுமாறு செய்ய வேண்டும்.


அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 ஆடி மாதம்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **ஞானத் திரு விளக்க ஞானத் திருவோலை** - 25-11-1988இல் சிறுமுகைச் சித்தரடியாளுக்கு குருதேவர் எழுதிய திருவோலை.
2. **நான்வேத சித்தர் அருட்கோட்டம்** - 11-7-1988இல் பிறம்மயோகி அவர்களுக்கு சோழவந்தான் அருகே உள்ள குருவித்துறை என்ற ஊரில் உருவாக்கப்பட்ட அருட்கோட்ட உயிர்ப்புப் பணி பற்றி குருதேவர் வழங்கிய அறிவுரைகள்.
3. **யார் எந்த மதத்தில் இருந்தாலும் தமிழர்களே!** - தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பொதுச் செயலாளருக்கு குருதேவர் 23-9-1988இல் விடுத்த பொதுவான அறிவுரை அஞ்சல்.
4. **செயல்விளக்கத் திருவோலை** - சிறுமுகையைச் சேர்ந்த புதிய அறிமுகத்தார் ஒருவருக்கு 8-11-1988இல் குருதேவர் விடுத்த நெடிய அஞ்சல்.
5. **குருவாணைத் திருவோலை** - 10-11-1988இல் கடந்தப்பட்டி சித்தரடியான்கள் வழியாக அனைவருக்கும் தஞ்சைத் தாத்தா அண்டபேரண்ட அருட்பேரரசராக வெற்றி பெற்றுத் திரும்பிய செய்தியை அறிவித்த திருவோலை.
6. **அண்டபேரண்ட அருட்பேரரசராக தஞ்சைத் தாத்தா முடிசூட்டிக் கொள்தல்** - 24-11-1988இல் சிறுமுகையைச் சேர்ந்த சித்தரடியான் வழியாக அனைவருக்கும் தஞ்சைத் தாத்தாவின் அண்டபேரண்ட அருட்பேரரசர் நிலையை விவரித்து குருதேவர் எழுதிய அஞ்சல்.
7. **சித்தரடியானுக்கு வழங்கிய குருபாரம்பரிய வாசகங்கள்** - நாமக்கல் சித்தரடியானுக்கு 27-6-1988இல் குருதேவர் எழுதிய அஞ்சலில் இருந்த குருபாரம்பரிய வாசகங்கள்.

தலைமைப்பீடம்,
25-11-1988.

# <u>ஞானத் திரு விளக்க ஞானத் திருவோலை</u>

ஞானத்தந்தை, ஞானுச்சாரியார், தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம், பரபிறம்மம், நான்கு யுக நாயகம், இந்துமதத் தந்தை, குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி; ஞானச்செல்வி, மகாசத்திக்கு எழுதும் **<u>ஞானத் திரு விளக்க ஞானத் திருவோலை</u>**.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) அன்பு மகளே! உன்னுடைய 23-11-88ஆம் தேதியிட்ட அஞ்சல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நீ இவ்வளவு தெளிவாகவும், துணிவாகவும், தனித்து அஞ்சல் எழுதியமை பாராட்டுக்கு உரியது. மீண்டும் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம். வெற்றியுண்டாகட்டும்.

3) மகளே! யக்ஞத்தில் யாருமே விருப்பம் இல்லாமலோ அல்லது உடல் அசதியுடனோ அல்லது களைப்புடனோ அல்லது தூக்கத்துடனோ ஈடுபடக் கூடாது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் யாரையுமே வற்புறுத்தியோ, அச்சுறுத்தியோ ஈடுபடுத்தக் கூடாது. இதேபோல, யக்ஞத்தில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் யாரையும் தடுக்கக் கூடாது. இந்த சட்டதிட்டக் கட்டுப்பாட்டினை என்றைக்கும் முழுமையாக கடைப்பிடிக்க முற்பட வேண்டும்.

4) மகளே! இம் மண்ணுலகில் சுமார் எண்ணூறு கோடி பேர் வாழ்கிருர்கள். இதில் அருள் ஊறப்பெறும் பக்குவமுடையவர்கள் அல்லது யோகமுடையவர்கள் சில ஆயிரம் பேர்கள் கூட இருக்க மாட்டார்கள். இவர்களிலும் தக்க குருவைப் பெற்று குரு வழியாக, குருவின் துணையோடு உரிய பூசைகளையெல்லாம் செய்து; பெரிய சித்திகளைப் பெறுகிறவர்கள் சில நூறு பேர்கள் கூட இருக்க மாட்டார்கள். அதிலும் தான் பெற்ற அருளை பொதுவாக உலக நன்மைக்கு செலவழிக்க வேண்டும், குருவாணைப்படியே வாழ்ந்து அருளுலகில் நீடித்த நிலைத்த புகழைப் பெற வேண்டும் என்ற உணர்வுடையவர்கள் ஏறத்தாழ விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்குக் கூட இருக்க மாட்டார்கள். இதுதான் அருளுலக உண்மை!

5) மகளே! நாம் அன்ருடம் வாழ்வில் அடிக்கடி மனிதர்கள் செத்து பிணமாகி தூக்கிச் செல்லப்பட்டு புதைக்கப்பட்டோ அல்லது எரிக்கப்படுவதையோ பார்க்கின்ருேம் அல்லது கேள்விப்படுகிருேம். நம்மவர்களில் எத்தனை பேர் தங்களுக்கும் சாவு வரும்; தங்களையும் புதைக்கப் போகிருர்கள் அல்லது எரிக்கப் போகிருர்கள்; தாங்களும் தங்களுடைய வாழ்க்கையில் இன்றைக்குள்ள சொந்தங்கள், பந்தங்கள், சொத்துக்கள், உரிமைகள், பெருமைகள், மரியாதைகள், புகழ்கள், செல்வாக்குகள், ... முதலியவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஒருபிடி சாம்பலாகவோ அல்லது ஒருபிடி மண்ணுகவோ போவதை எண்ணிப் பார்க்கிருர்கள்?! எல்லோருமே இதனை எண்ணிப் பார்க்கவே மறுக்கிருர்கள் அல்லது வெறுக்கிருர்கள் அல்லது மறக்கிருர்கள் அல்லது துறக்கிருர்கள். <u>இப்பேருண்மையினை அவ்வப்போது நினைவுபடுத்தத்தான் எல்லாவகையான சோதிடக் கலைகளும், அருட்கணிப்புக்களும், பூசைகளும் நடைபெறுகின்றன.</u> இப் பேருண்மையினை உணர்ந்து யக்ஞத்தையும் சிறப்பாக நடத்துங்கள்.

6) மகளே! அருள் என்பது தேடிப் பெறக் கூடியது அல்ல! முற்பிறவிப் பயனால், விதிப் பயனால், ஊழ்வினையால் தானாகவே கிடைக்கக் கூடிய ஒன்றாகும். அது உனக்கு ஏராளமாக இருக்கின்றது. இப் பிறவியில் மகாசத்தியாக சித்தி பெறும் அரிய பெரிய வாய்ப்பு உனக்கு இருக்கிறது. புரிந்தால் புரிந்து, விரும்பினால் விரும்பி, நம்பினால் நம்பிச் செயல்படலாம். இல்லையேல் உன் விருப்பம். யாரும் வற்புறுத்தியோ! அச்சுறுத்தியோ! இச்சகம் பேசியோ! அருளுலகில் செயல்பட்டு விட முடியாது.

**“கல்லில் சந்தனக் கட்டை வைத்து தேய்த்து தேய்த்து அரைப்பது போல் தொடர்ந்து குருபத்தியினால் இடைவிடாத முயற்சிகளைச் செய்து பெறுவதுதான் சித்தி”** என்று கூறும் குருபாரம்பரிய வாசகத்தை இங்கு நினைவுபடுத்துகிறோம்.

7) மகளே! **“கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த சொல்லும், சிறிது காலத்திற்கு மேல் பயன்படாது, நிலைத்திருக்காது”** என்ற முதுரையையும்; **“மேயப் போகின்ற மாட்டிற்கு கொம்பில் புல்லைக் கட்டிவிடுவது இல்லை”** என்ற பழமொழியையும் எண்ணிப் பார்த்திடு.

8) மகளே! அனுப்பப்படுகின்ற கட்டுரைகளை பலமுறை திருப்பித் திருப்பிப் படித்திடு. ஏற்கனவே அச்சடிக்கப் பட்ட புத்தகங்களையும் பலமுறை திருப்பித் திருப்பிப் படி. அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் திரு பழ.கோபால் அவர்கள் உலகியல் அநுபவம் நிறைந்தவர். நிறைய படித்தவர். அவருடனும் கருத்துக்களை விவாதித்து விளக்கம் பெற முற்படு.

சுடலைக்கும், ஆத்தாள் கோனியம்மன் கோவிலுக்கும் வாரம் ஒருமுறையாவது சென்று வர முயற்சி செய். உன்னுடைய விருப்பங்களும், எண்ணங்களும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் இனிதே நிறைவேறட்டும். அனைத்துக்கும் அம்மையப்பன் துணையே!

அடிக்கடி அஞ்சல் தொடர்பு வைத்துக் கொள்.

அனைவருக்கும் எம் அன்பையும் வாழ்த்தையும் தெரிவியுங்கள்.

**அன்பு**
**ஞானாச்சாரியார், ஞானத்தந்தை, நான்குயுக நாயகம்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**25-11-1988.**

<u>**குறிப்பு:-**</u>

மகன் பழ.கோபால் முழுப் பொறுப்புடன் மாதண்ட நாயகமாகச் செயல்பட வேண்டும்! இன்னும் தயக்க மயக்கங்கள் தேவையில்லை! மகன் சுடலை பெரி.முத்தையாவிடம் தேவையான விளக்கங்களைப் பெறுக.

**குருவாணை.**
25-11-1988.

<u>**பின்குறிப்பு:-**</u>

இத்துடன் அனுப்பப்படும் முடிகயிற்றை தாங்களே தங்கள் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் கட்டிவிடுங்கள்.

கோவை மாவட்டத்தில் இயக்க வளர்ச்சி தங்களிடம் ஒப்படைக்கப் படுகிறது. வார வழிபாட்டு மன்றமும், கிளைகளும் துவக்குங்கள்.

<u>குருதேவர் கூற எழுதியது:</u> திருவோலை நாயகம், அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, 25-11-88.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் கையொப்பமும், குருவாணைக் குறிப்பும் குருதேவரால் எழுதப்பட்டு இருந்தது. பின்குறிப்பு சித்தரடியார் திரு சீ.மணி அவர்களால் எழுதப்பட்டிருந்தது.//**

ஓம்

இ.ப.மு.பி.அ.எண்: 019/88.
தலைமைப்பீடம்,
11-7-1988.

**குருவித்துறை (சோழவந்தான், மதுரை மாவட்டம்)**

# நான்வேத சித்தர் அருட்கோட்டம் (15-7-88)

பேரன்புமிக்க அருள்மிகு பிறம்மயோகி M.S.R.மாரியப்பன் அவர்கள் சமூகத்திற்கு,

குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுக்கும் மடல்.

யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும்.

1) தாங்கள் பேரார்வத்துடனும், பேராற்றலுடனும் அ.வி.தி. பணிகளையும், இ.ம.இ. பணிகளையும் செய்து வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி! வாழ்த்துக்கள்.

2) தெற்கு மண்டலத்தின் தலைமையகம் என்று இன்றைக்கு 115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-10 என்ற துரையின் முகவரியைத்தான் பயன்படுத்துகின்றோம். எனவே, எல்லாத் தனிமனிதர்க்கும் வந்துள்ள இயக்கம் பற்றிய அஞ்சல்கள், ... **யாவும் ஒரே இடத்தில் காக்கப்பட்டால் நல்லது**. தேவையான புதிய கோப்புக்கள் வாங்கி, தேவையானல் சேவுகனையும், இரவீந்திரனையும் வரவழைத்துக் கொண்டு மதுரை மாநகருக்குள் உள்ள அஞ்சல்கள் அனைத்தையும் தேதி அடிப்படையில் மாதம், ஆண்டு எனத் தொகுத்து; பின், குறிப்பிட்ட மாதங்களுக்கு

ஒரு கோப்பு என ஏதேனும் ஒரு அடிப்படையில் பிரித்து; நம்மவர்கள் யார் வந்தாலும் படித்துத் தெரிந்து கொள்ளும் வண்ணம் வைக்க வேண்டும். அதுதான் விஞ்ஞானப் பூர்வமான வளர்ச்சியை நம்மிடையே உருவாக்கும். அதுதான் முறையான இ.ம.இ., அ.வி.தி. வளர்ச்சியை நல்கும்.

**குறிப்பு:-** யாராக இருந்தாலும், அங்கேயே அமர்ந்துதான் கோப்புக்களைப் படிக்க வேண்டும். வெளியே எடுத்துச் செல்லக் கூடாது. குறிப்புக்கள் வேண்டுமானால் எழுதிக் கொள்ளலாம்.

3) பெரியவரும், N.S.சாமிநாதனும் சென்னை வந்து திரும்பிய பின்னர் தாங்கள் எழுதிய அஞ்சல் ஒன்று தேதி குறிப்பிடப்படாமல் 8-7-88 வெள்ளியன்று வந்து சேர்ந்தது. அதற்குரிய பதிலாக இதனை ஏற்கவும். இனிமேலாவது கடிதங்களில் தேதி குறிப்பிடவும்.

4) ஞாயிற்றுக் கிழமைகளில் மதுரை மாநகரத்திற்குள் இருக்கக் கூடிய முதன்மையான கோயிலை எல்லாம் தேர்ந்தெடுத்து வாரம் ஒரு கோயிலாக சிவசத்தி வார வழிபாட்டு மன்றம் (மகளிர்க்கு மட்டுமல்ல, எல்லோரும் சேர்ந்து) மூலம் கூட்டு வழிபாடு அந்தந்த வட்டார மக்களையும் சேர்த்துக் கொண்டு; மதுரை மாநகருக்குள் உள்ள பத்தியாளர்களை எல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு வாரம் ஒருமுறை சந்தா வாங்கி கோயிலில் பூசை, கருவறை முழுக்காட்டு, ஏதேனும் ஒரு வேளை அருளூறு படையல் பொருட்கள், பசனைக் குழு (உலகியலுக்கேற்ப), நமது பூசாமொழி வாசகங்கள், கருத்துரைகள் வழங்கல், பட்டிமன்றம், கவிதையரங்கம், பொதுமக்களுக்கு சுண்டல் வழங்கல், ஒலிபெருக்கி வைத்தல், இசைக் கச்சேரி நடத்தல், ... முதலியவற்றில் எவற்றை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

இப்படி மதுரைக்குள் நாலாபக்கங்களிலும் தேர்ந்தெடுத்து ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகலில் அல்லது முற்பகலில் நிகழ்த்தி பத்திநெறிகளை

வளர்க்கலாம். இதற்காக 'அறநெறி வளர்ச்சிக் கழகம்', 'பத்திநெறி வளர்ச்சிக் கழகம்', ... என்று ஏதேனும் பல பெயர்களில் ஆங்காங்கே பல அமைப்புக்களை நமக்கு தொடர்பு உள்ளவைகளாக ஆக்குங்கள். இத்துடன் நாயன்மார்கள், ஆழ்வார்கள், இலக்கிய மேதைகள், பல்துறைக் கலைஞர்கள், ... முதலியவர்களின் பெயர்களில் தமிழ் வளர்ச்சி மன்றங்கள், தமிழ்ச் சங்கங்கள், இலக்கியங்களின் பெயரால் (சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம்...) மன்றங்கள், ... என்று பல அமைப்புக்களைத் தமிழகப் பொதுமக்களோடும், இளைஞர்களோடும் தொடர்புபடுத்திக் கொள்ள உருவாக்குங்கள். ஏற்கனவே இது போன்று உள்ள அமைப்புக்களோடு விரைந்து தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள்.

ஏனென்றால், தாங்கள்தான் இ.ம.இ.யின் தென்மண்டலத் தலைவர். இதில் எல்லா அரசியல், சமுதாய, சமயக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம். எனவே, அடுத்து வரும் தேர்தலையாவது நமது இயக்கம் சந்திக்கும் அளவிற்கு தமிழ்மொழி, மதம், இனம், பண்பாடு, நாகரீகம், இலக்கியம், ... என்னும் அடிப்படையில் பதினெண்சித்தர்களின் கருத்துக்களை வழங்கித்தான் தமிழர்களை ஒன்றுதிரட்ட முடியும்! ஒற்றுமைப்படுத்த முடியும்!. இந்த சித்தாந்த அடிப்படையில் தாங்கள் செயல்பட்டு மாபெரும் வெற்றியை அடைய வேண்டும்.

தமிழகத்தில் உள்ள மற்ற மண்டலத் தலைவர்களை எல்லாம் அழைத்து இவர்களுக்குப் பயிற்சிகள் தர வேண்டும். அல்லது மண்டலத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கொள்கைப் பரப்புச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் முதலியவர்களை மட்டுமாவது சென்னையில் தங்களின் தலைமையில் கூட்டி, **கருத்துப் பரிமாற்றங்கள்** நிகழ்த்தி செயல்திட்டங்களை வகுக்க வேண்டும். இதற்காகத் தாங்கள் மண்டலங்கள் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து

தயாரிக்க வேண்டும். இதற்காகப் பல மாதண்ட நாயகங்களையும், அருட்கோட்டத் தலைவர்களையும், அ.வி.தி. செயல்வீரர்களையும் உருவாக்க வேண்டும்! உருவாக்க வேண்டும்! உருவாக்க வேண்டும்! விரிவான பதில் தேவை. நிர்வாகக் குழு கூடி விவாதிக்க!

5) குருவித்துறை சுடலை ஆண்டிச்சி **அருட்கோட்ட உயிர்ப்புப் பணியும், புத்துயிர்ப்புப் பணியும்** பற்றிய ஒரு சில குறிப்புக்கள்:

a) இந்த அருட்கோட்டம் தங்களின் மாபெரும் சாதனையாகும். பாராட்டுகின்றோம்.

b) இந்த அருட்கோட்ட நிகழ்ச்சிகளுக்கு தென்மண்டலம் முழுவதுமுள்ள முதன்மையானவர்கள் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவியுங்கள்.

c) இந்த உயிர்ப்புப் பணிக்காகவும், புத்துயிர்ப்புப் பணிக்காகவும் முக்கியமானவர்கள், மற்ற மாவட்டத்தினர்கள், வசதியுள்ளவர்கள் வந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுங்கள்.

d) 14-7-88ஆம் தேதி வியாழன் அன்று பகலிலேயே அந்த ஊருக்குச் செல்ல வேண்டும். மாலையில் அந்த ஊரில் உள்ள கோயில்களுக்குச் செல்ல வேண்டும். அந்தந்த கோயில் பூசாறிகள் மூலம் கலசம் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதாவது தாங்கள் பிறர் மூலமோ அல்லது தாங்களோ வழக்கம் போல் நமது முறையில் கலசம் தயாரித்து அந்தக் கோயில் பூசாறியிடம் தந்து **அந்தந்தக் கருவறைகளில் (கோயிலில்) இரவு முழுவதும் இருக்க வைத்து** காலையில் பெற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, மீண்டும் அருட்சினை செய்து கற்பூரம் காட்டி அந்தந்த பூசாறிகளிடமிருந்து அந்த ஊர்க்காரர்களில் ஒருவர் அல்லது பூசாறியே நமது அருட்கோட்டம் முழுவதும் தெளித்து எங்கு யாகசாலை வைக்கிறார்களோ அங்கு மீதமுள்ள தண்ணீரை நன்கு தெளித்து [முக்கோணம், வட்டம், சதுரம் என்று] மூன்று

யாககுண்டங்களை வெட்டக் கூடிய இடத்தில் இலைகள் அனைத்தையும் தூவிவிட்டு தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்ட வேண்டும். இதுபோல், அந்த ஊரிலும், சுற்று வட்டாரத்திலும் உள்ள கோயில்களில் இருந்து [48 மைல் எல்லைக்குட்பட்ட எத்தனை கோயில்களில் வேண்டுமானாலும் (அனைத்து வகையான கருவறைகளிலிருந்தும்)] இதேபோல் கலசங்கள் கொண்டு வரச் சொல்லலாம். அல்லது நம்மவர்கள் கலசங்கள் கொண்டு வரலாம் என்ற ஏற்பாட்டினைச் செய்து விடுங்கள்.

<u>குறிப்பு</u>:- இப்படிப் புனித நீர் கொண்டு வந்து தரும் அனைத்துக் கோயில்களும் உயிர்ப்புப் பெறும்; புத்துயிர்ப்புப் பெறும். ஊர்ப் பெரியவர்களோ அல்லது பூசாறியோ கொண்டு வந்தால் அவர்கள் கழுத்தில் ஒரு மணிமாலையோ அல்லது 48 முடிச்சு கயிறோ போடுங்கள். ஏனெனில் சோழவந்தான் வட்டாரம் நமது குருதேவரின் முன்னோர்கள் பலரும், குலதெய்வங்கள் பலரும் இருக்கின்ற இடம்.

e) இந்த அருட்கோட்டப் புத்துயிர்ப்புக்கு வருகின்றவர்கள் தங்கள் வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப வீட்டிலிருந்து எலுமிச்சைச் சோறு, புளிச் சோறு முதலியவையும்; அதிரசம், முறுக்கு போன்ற எண்ணெய்ப் பலகாரங்களையும் கொண்டு வந்து படைத்து அனைவருக்கும் தரலாம், உண்ணலாம், பயன்பெறலாம். ஆண்டிச்சியின் அருள் கிடைக்கும்.

<u>குறிப்பு</u>:- அரிசி, பருப்பு, கோழி, புறு, மீன் முதலிய பலிபொருள், ... முதலியன கொண்டு வந்து புத்துயிர்ப்பு நாளில் படைப்பவர்களுக்கு சிறந்த பயனுண்டு.

f) மதுரையிலிருந்து நம்மவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு அவரவர் விருப்பம் போல் முன்பே தங்களிடம் அல்லது நிர்வாகக்

குழுவிடம் கலந்து பேசி ஒப்புதல் பெற்று தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் ஆலயம், மீனாட்சியம்மன் ஆலயம், மடப்புறம் காளி கோயில், தாத்தா மதுரை மொட்டைக் கோபுரத்து முனீசுவரர் கோயில், வேறு மதுரை வட்டாரத்தில் உள்ள கோயில்கள், அருட்கோட்டங்கள் முதலியவற்றிலிருந்து புனித நீர்க் கலயங்கள்; ஆல், அரசு, வேம்பு, மா, பலா (பலா கிடைக்காவிட்டால் நாவல், நெல்லி) எனும் 5 இலைகள் வைத்து, தேங்காய் வைத்து சிங்காரித்து எடுத்து வர வேண்டும். இந்த ஏற்பாடு எல்லோருக்கும் நலம் பயக்கும். இவற்றையும் புத்துயிர்ப்பு யாக சாலை அமைக்கும் இடத்தில் தெளித்து தேங்காய் உடைத்துப் பூசை செய்ய வேண்டும்.

g) முடிந்தால் இந்த அருட்கோட்டம் அமைய ஆண்டிச்சியோடு அருகில் உள்ள மலைகளில் வாழும் சித்தர்களையும் அழைப்பதற்காக ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பாகவே அருட்கோட்டம் முழுவதையும் நன்கு செதுக்கி சுத்தம் செய்து குறைந்தது எட்டு அல்லது பதினாறு குழிகள் முதல் 48 குழிகள் வரை அருட்கோட்டத்தைச் சுற்றித் தோண்டி அந்த ஊரிலும், அதன் சுற்று வட்டாரத்திலும் உள்ள தனிமனிதர்களின் விருப்பப்படி ஆளுக்கொரு மரம் நடச் சொல்லுங்கள். குருதேவர் வரும்போது அவரவர் வீட்டின் யோகத்தை ஆராய்ந்து அருளூறு சக்கரங்கள், எந்தரங்கள் முதலியன வழங்கப் பெற்று அவரவர்கள் கையாலேயே அந்தந்த மரங்களுக்கு வைக்கப்படும். அதனால், அந்தந்த குடும்பங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். இவை நடுகின்ற நாளில் யாகசாலை அமைகின்ற இடத்தில் ஒரு திரிசூலம் 6 முதல் 18 அடி உயரம் வரை என்று எந்த உயரத்தில் வேண்டுமானாலும் நடலாம். மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றலாம். ஓதுவார்களை அழைத்துச் சென்று குறைந்தது ஆர்மோனியப் பெட்டி, தாளம், மிருதங்கத்துடன் சென்று தேவார திருவாசகக்

கச்சேரி நடத்தினால் நல்லது. இல்லாவிடில் நம்மவர்களே ஏதேனும் ஒரு சில இசைக் கருவிகளோடு சென்று சில தேவாரப் பாடல்களையும், சிவபுராணத்தையும் பாடி, அவற்றோடு நமது பூசாமொழி வாசகங்களையும் கூறலாம். மாவிளக்கு போடலாம். முளைப்பாரி கொண்டு வந்து வைக்கலாம். சுண்டல் படைத்து வழங்கலாம். **<u>இதனைப் புத்துயிர்ப்புக்கு முதல் நாளும் செய்யலாம்</u>**.

**குறிப்பு:-** இந்த அருட்கோட்ட ஆண்டிச்சியம்மன், திருப்பரங்குன்றத்து ஆண்டிச்சியம்மாளோடு குருதேவரைப் பார்க்கப் பலமுறை வந்து விட்டார்கள். இவர்கள் அ.வி.தி. பணிக்கும், இ.ம.இ. வளர்ச்சிக்கும் மிகவும் உதவி செய்வார்கள். இந்த அருட்கோட்டத்திற்கு "**<u>நான்வேத சித்தர் அருட்கோட்டம்</u>**" என்று பெயர் வையுங்கள். இங்கு தமிழர் வேதமான பதினெண்சித்தர்களின் பூசாமொழி வாசகங்களும், பன்னிரு திருமுறைகளும், பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களும், அருணகிரியார், பட்டினத்தார், தாயுமானவர், மௌனகுரு, இராமலிங்க அடிகளார் முதலிய ஞான வள்ளல்களின் பாடல்களும் பாடப்படுவது சிறப்பு. எனவே, இந்த ஊருக்குள்ளும், சுற்று வட்டாரத்து கிராமத்துள்ளும் மகளிர்க்கான வார வழிபாட்டு மன்றங்களும் (புதன்கிழமை = விளக்குப் பூசை), ஆண் பெண் அனைவருக்கும் உரிய ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தக் கூடிய பசனைப் பூசையும் நிகழுவதற்காகப் '**<u>பதினெண்சித்தர் ஞானசபை</u>**' அல்லது அவர்களுக்கு விருப்பமானவர்களின் பெயரில் ஞானசபை வைத்து நடத்தக் கூறுங்கள்.

h) இந்தப் புத்துயிர்ப்புப் பணிக்குச் செல்பவர்கள் அனைவரும் தத்தனேரியில் ஒன்று திரண்டு ஆண்கள் சன்னிதான உடையிலும், பெண்கள் செவ்வாடையிலும் இருந்து பூசை செய்து பிறகு அங்கிருந்து கூட்டமாகப் புறப்பட்டுச் செல்வது எல்லா வகையிலும் பயன் தரும்.

i) மூன்று யாக குண்டங்களும் அந்த அருட்கோட்டத்தின் காப்பாளருடைய கையின் ஒன்றரை முழ நீள அகல ஆழங்களைப் பெற்றிருந்தால் நல்லது. தேவையான சக்கரங்களை உங்களிடம் இருப்பவைகளைப் பயன்படுத்தி (யாகசாலைக்குள் புதைத்து) வழக்கம் போல் யாகசாலைகளை கட்டித் துவக்குங்கள். இதற்கு மேல் தேவையான விளக்கங்கள் இருப்பின் திருப்பரங்குன்றம் ஆண்டிச்சி மரகத மாணிக்க அம்மையாரை அருள்நிலையில் நிறுத்தி அருள்வாக்காகக் கேட்டுக் கொள்ளுங்கள். அதற்கு **இதுவே குருவாணை**.

**குறிப்பு:-** இந்த அஞ்சலை ஒரு பிளாசுடிக் அல்லது பாலிதீன் கவருக்குள் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். வேகமாக மதுரை வட்டாரத்தில், சோழவந்தான் வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு நகல் தாருங்கள். M.C.இராமனிடம் கூறி பேரு நகலை தலைமைப்பீடத்திற்கு அனுப்பக் கூறுங்கள். இந்த அஞ்சலின் நகலைத் துரையின் கோப்பிற்கும் தாருங்கள். இந்த அஞ்சலை அருளேற்றி அனுப்புவதால்; தாங்கள் தங்கள் கைப்பட இந்த அஞ்சலை மரகதத்தின் இரண்டு கண்களிலும் மூன்று முறை வைத்த பிறகு கடிதத்தை இடது கையில் பிடித்துக் கொண்டு வலது கையால் மூன்று முறை மஞ்சள் தண்ணீரை மரகதத்தின் தலையில் தெளிக்க வேண்டும். உடனே மரகதத்திற்கு அருள்நிலை வந்து அனைத்தும் கூறிடுவார். அப்படி வரா விட்டாலோ, அருள் இடையில் நின்று விட்டாலோ மரகதத்தை வடக்குப் பார்த்து உட்காரச் சொல்லி குருதேவரின் முற்பிறவித் தம்பியும், இப்பிறவி ஏற்பு மகனுமான ச.துரைராசன் B.Sc., அவர்களை கரண்டியில் நெருப்பெடுத்து சாம்பிராணி போட்டு குருதேவரின் அருட்பட்டம் கூறிக்கொண்டு 9 முதல் 18 வரை மரகதத்திற்குச் சுற்றிக் காட்ட வேண்டும்; அல்லது மரகதத்தைச் சுற்றி வர வேண்டும். பிறகு எப்பொழுது தேவைப்பட்டாலும்

துரைராசன் மரகதத்தின் முன்னால் நெருப்பை வைத்து சாம்பிராணி தூவினால் குருவித்துறை ஆண்டிச்சி வருவார்கள். வேறு அருளாளி கிடைக்கும் வரை மரகதமே குருவித்துறை ஆண்டிச்சிகாகவும் செயல்படட்டும்.

<u>திருவோலை நாயகங்கள்:-</u>
தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார்,
தலைமைப்பணியாளர்களுள் ஒருவர்,
பச்சைமலை வீரப்பட பத்திறகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன்.
11-7-1988.

காரைக்குடி அகத்தியர் அருட்கோட்ட குடும்பத்தார்களையும், அவர்களைச் சேர்ந்த அடியான், அடியாள், அடியார்களை பங்கு கொள்ள அஞ்சல் மூலமோ, நேரிலோ சென்று அழையுங்கள். **குருவாணை.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# யார் எந்த மதத்தில் இருந்தாலும் தமிழர்களே!

தலைமைப்பீடம்,
23-9-1988.

அருள்மிகு காரைக்குடி புதுப் பெரியவாள் ஆதிக்கொப்புடைய நாயகியம்மன் சன்னிதானம், தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர், சித்தரடியார் சித்தர் மகன் இரா.முத்துராசமூர்த்தி அவர்களுடைய சமூகத்திற்கு விடுக்கப்படும் செயல்விளக்கத் திருவோலை.

(1) அன்பு செல்வ! பேரார்வமும் பேராற்றலுமிக்க செயல்வீர! எமது பதிலியாகச் செயல்படும் தரமும், திறமும், திரமும், தீரமும், வீரமும் வாய்க்கப் பெற்ற மகனே! அனைத்தும் வெற்றியாகட்டும், பயன் நல்கட்டும்.

(2) உன்னுடைய உலகியல் அறிவுக்கும், அநுபவத்துக்கும் ஏற்ப நமது இன மொழி மத விடுதலைக்காகப் போராடக் கூடிய வீரர்களையும், வீராங்கனைகளையும் திரட்டும் பொறுப்பும், அவர்களைத் தயாரிக்கும் பொறுப்பும் உன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. மேலும், நீ ஒரு விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர். எனவே, உலகியலுக்கேற்ப உன்னை எப்படியெப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்; எத்தகைய கோலங்களை வேண்டுமானாலும் பூண்டு கொள்; எவரை வேண்டுமானாலும் சந்தித்து நம்மை அறிமுகப்படுத்திக் கொள். <u>நம் காலத்துக்குள் மக்களை திரைப்பட மாயை, அரசியல் மாயை, போலி நாகரீக வாழ்க்கை, பயனற்ற பொழுதுபோக்கு .... முதலியவைகளிலிருந்து விடுவித்தேயாக வேண்டும்</u>.

(3) உன்னுடைய தந்தை பல தொழிலாளர் இயக்கங்களிலும், அமைப்புக்களிலும் இருந்து அநுபவப் பட்டவர். அவரும், உன் தாயாரும் அருட்பணிக்காக தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள். எனவே, பொறுப்போடும், பொறுமையோடும் அவர்களுடைய அநுபவங்களையும், அறிவுரைகளையும், துணையையும் நன்கு பயன்படுத்திச் செயல்படு. உனது உடல் நலமும், உள்ள நலமும் ஓய்வை நாடினால் வீட்டிலேயே இருந்து கொண்டு அழகப்பா பல்கலைக் கழகத்து மாணவர்களையும், தமிழாசிரியர்களையும், அந்த வட்ட, வட்டார, மாவட்ட படித்த, படிக்கின்ற, படிக்க முடியாத இருபால் இளைஞர்களையும் சந்தித்து உரையாடிடு. அவரவர் ஆர்வத்துக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப தமிழின விடுதலைக்காக மட்டுமோ அல்லது தமிழ்மொழியின் விடுதலைக்காக அல்லது தமிழர் மத விடுதலைக்காக மட்டுமோ உழைப்பதற்குரிய வாய்ப்பு வசதிகளையும், நிறுவன நிர்வாகங்களையும், புதிய புதிய கட்டமைப்புக்களையும் சங்கம், மன்றம், சபை, கழகம், ... என்ற தனித்தனி பெயர்களில் ஆங்காங்கே உருவாக்கிச் செயல்படக் கூடிய நிலைகளுக்கு ஏற்பாடு செய்திடு. அவற்றால்தான் நல்ல பயன் விளையும்.

(4) அன்பு மகனே! கிறித்தவர், முகமதியர், புத்தர், சமணர் ... என்று வேற்று மதங்களில் உள்ள தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்று மறந்து விட்டனர். எனவே, **யார் எந்த மதத்தில் இருந்தாலும் தமிழர்களே** என்ற பற்றுணர்வும், விழிப்புணர்வும், நம்பிக்கையுணர்வும் ஏற்படுமாறு செய்ய வேண்டும். அப்போதுதான், தமிழின விடுதலையும், தமிழ்மொழி விடுதலையும், தமிழரின் பண்பாட்டு (மத) விடுதலையும் வளத்தோடும், வலிமையோடும் உருவாகிடும். எனவே, நமது பதினெண்சித்தர்களுடைய நெறியான சீவநெறிக் கருத்துக்களை பரப்புவதன் மூலம்தான் இவற்றைச் சாதிக்க முடியும் என்று உணர்ந்து செயல்படு.

(5) நமது இயக்கத்தில் வெகு வேகமான வளர்ச்சியிருப்பதால், வழக்கம் போல் மற்ற இயக்கங்களில் குழப்பவாதிகளும், அவசரக்காரர்களும், ஆத்திரக்காரர்களும், போட்டி பொறுமைக்-காரர்களும் மித வாதங்களையும், பிரிவினை வாதங்களையும், திரிபு வாதங்களையும், தேக்க முடக்க வாதங்களையும், புரியாமை நிலை வாதங்களையும், ... வளர்ப்பது போல் நம் இயக்கத்தில் ஆங்காங்கே உருவாக்கியுள்ளார்கள். அவற்றையெல்லாம் வென்று செயல்-படுவதற்காகத்தான் 'தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை' என்று தயாரித்து அதற்குப் பல நகல்களும் தயாரித்துக் கொடுத்துள்ளோம். அவற்றைப் பயன்படுத்திச் சுறுசுறுப்பாகச் செயல்படு! வெற்றி உனதே. அடிக்கடி அஞ்சல் அனுப்பு. உனக்குத் தேவையான விளக்கங்களையும், உதவிகளையும் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். அனைவருக்கும் எமது அன்பைக் கூறு.

**ஏற்புத் தந்தை - தலைவர்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
**23-9-1988.**

குடும்பத்தார், நண்பர், இயக்கத்தார் அனைவர்க்கும் படித்துக் காட்டுக! சில நகல்கள் அனுப்புக!

இரண்டு பேனா நகல்கள் அனுப்புங்கள். இரண்டு Xerox நகல்கள் அனுப்புங்கள்.

சீனு,
தலைமைப் பணியாளன்.

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த அஞ்சல். இறுதியில் குருதேவர் அவர்களின் கையெழுத்து இருந்தது.//**

ஓம்

தலைமைப்பீடம்,
8-11-1988.

# செயல்விளக்கத் திருவோலை

உயர்திரு கொ.பொ.இராமசாமி அவர்களுக்கு (ஆசிரியர், அக்கரை செங்கப்பள்ளி, சிறுமுகை-641302),

ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுக்கும் செயல்விளக்கத் திருவோலை.

1) தங்களின் 4-11-88 தேதியிட்ட மடல் கிடைத்தது. தாங்கள் சென்ற ஆகசுட்டு மாதம் திரு பழ.கோபால் மூலமும், மதுரை சுடலைச் சன்னிதானம் திரு முத்தையா அவர்கள் மூலமும் இயக்கத்தில் சேர்ந்த செய்திகள் அறிந்தோம். தாங்கள் சொந்தத்திலேயே பெருமுயற்சி செய்து, வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்றிருக்கிறீர்கள் என்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சி. தாங்கள் தற்பொழுது செயற்கைப் பட்டாலை மேனிலைப் பள்ளியில் இளநிலைப் பட்டதாரி ஆசிரியராகப் (Under Graduate Teacher in South India Viscose Matriculation Higher Secondary School, Sirumugai) பணியாற்றுவதற்கு மிக்க மகிழ்ச்சி.

2) தாங்கள் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழர்கள் மதமான இந்துமதம் முதலியவற்றிற்காக தங்கள் வாழ்நாளில் நிலைத்த தொண்டு எதனையாவது செய்தே தீர வேண்டுமென்று உறுதி பூண்டு, அதைச் செயலாக்கப் பெருமனம் கொண்டு, பேரார்வத்துடன் எமக்கு அஞ்சல் எழுதியிருப்பதற்கு மிக்க மகிழ்ச்சி. தங்களுடைய வசதி வாய்ப்புகளுக்கும், பேரார்வத்திற்கும் ஏற்பத் தங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம் யாம். ஆனால், அதற்கு முன் யாமும், எமது இயக்கங்களும், எமது பணிகளும், செயல்திட்டங்களும், செயல்நிலைகளும் இம்மண்ணுலக வரலாற்றை

விடத் தொன்மையும், மேன்மையும், அளவில் மிகுதியும் பெற்றவையேயாகும் என்பதையும்; எனவேதான் எல்லோராலும் எங்களைத் தெரிந்து, புரிந்து, விரும்பி, முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

3) இதுவரையிலும், சுமார் 420 (நானூற்று இருபது) அச்சிட்ட அறிக்கைகள் ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ 10000 முதல் 100000 (நூறாயிரம்) வரை தொடர்ந்து அச்சிட்டு வழங்கியே வருகிறோம். இதுவரை ஏழெட்டு அறிவிக்கைகளுக்கு (Notice) மேல் படிக்கத் தெரிந்த நாலரைக் கோடித் தமிழர்களுக்கிடையில் வழங்கியும் கூட எங்களுக்குத் தேவையான அறிமுகமோ, புரிமுகமோ, ஆதரவுகளோ, ஏந்துகளோ கிடைக்க வில்லை! கிடைக்க வில்லை!! கிடைக்க வில்லை!!! இதுபோலத்தான் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் தங்களுக்குரிய அல்லது தேவையான ஆதரவையோ, அறிமுகத்தையோ பெற முடியாமல் மனம் நைந்து, சிந்தை வெந்து செயல்பட முடியாமல் சென்று விட்டார்கள். ஆனால், யாமோ ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) அண்டங்களுக்கும் அருட்பேரரசராக விளங்கும் பதினெண்சித்தர் பீடத்தின் வாரிசுகளுள் ஒருவராகத் தோன்றியிருப்பதால்தான் அருளியலாகவும், பொருளியலாகவும் உலகியலோடு இரண்டறக் கலந்து செயல்பட்டும், பிறரைச் செயல்படச் செய்தும் எம்மைச் சுறுசுறுப்பாகவும், ஆர்வம் குன்றாமலும், தன்னம்பிக்கை இழக்காமலும் வைத்துக் கொண்டிருக்கிறோம். அன்பு கூர்ந்து இவற்றை யெல்லாம் முறையாகவும், நிறைவாகவும் எண்ணிப் பார்த்து எம்மைப் பின்தொடர முற்படுங்கள்.

4) நமது தாயக வரலாற்றிலேயே அருளுலகிலும், பொருளுலகிலும், கல்வியுலகிலும், கலையுலகிலும் ஒருமித்து நெடிய, பெரிய பாரம்பரிய உரிமையும், பெருமையும் உடைய ஒருவர் தோன்றிச் செயல்படுவது எம் காலத்தில்தான் முதன்முதல் நிகழ்கின்றது. எனவேதான், இந்த நாட்டின் மொழி விடுதலை, மத விடுதலை, இன விடுதலை, கல்வி

விடுதலை, கலை விடுதலை, ... முதலியவற்றின் அடிப்படையில்தான் உலகம் முழுவதுமுள்ள மொழிகளின் விடுதலை, இனங்களின் விடுதலை, மதங்களின் விடுதலை, கலைகளின் விடுதலை, கல்வி விடுதலை, ... நிகழ முடியும் என்ற பேருண்மையினை விளக்கி கி.மு.100 முதல் கி.பி.150 வரை வாழ்ந்திட்ட பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தோற்றுவித்த விடுதலை இயக்கங்கள் அனைத்தையும் மீண்டும் துவக்கியிருக்கிறோம். யாருக்கு எதில் விருப்பமோ அவர்கள் அக்-கருத்துடைய இயக்கத்தின் கிளைகளை அவரவர் வட்டாரத்தில் தோற்றுவித்துத் தலைமைப்பீடத்துடன் இணைத்தும், இணைந்தும் செயல்படலாம்.

தனிமனிதர்களுடைய அறிவு, ஆற்றல், ஆர்வம், நம்பிக்கை, எண்ணற்ற ஆயிரக்கணக்கான தர வேறுபாடுகளை உடையவை. அவற்றிற்கேற்பத்தான் அவர்கள் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றும் நிலை என்று நாற்பத்தெட்டு (48) நிலையினராக, நாற்பத்தெட்டு (48) படியினராக பிரிக்கப்படுகிறார்கள். யாமும், இதனைக் கருத்தில் கொண்டுதான் எந்தக் கருத்தையோ, எந்தச் செயலையோ, எந்தச் செயல்திட்டத்தையோ எவர்மீதும் எள்முனையளவு கூடக் கட்டாயமாகத் திணிப்பதில்லை, வற்புறுத்துவதில்லை. மேலும் யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் தங்களுடைய உறவுநிலைகளை, உரிமைநிலைகளை, தங்களுடைய செயல்நிலைகளை, தங்களுடைய உதவிகளை, ஏந்துகளை வளர்க்கலாம், வளர்த்தலாம், தளர்த்தலாம், நிறுத்தலாம்; இடைவெளி விட்டு மீண்டும் தொடரலாம் - என்ற புதிய விதிமுறையையும் வகுத்திருக்கிறோம்.

ஆனால், போட்டியும், பொறாமையும், பேராசையும், வம்பும், வீம்பும், அகம்பாவமும், ஆணவமும், பிடிவாதமும், வறட்டுக் கௌரவமும், போலியான இயக்க வாழ்வும், கோழை மனமும், ... உடையவர்கள் தாங்கள் திடீரென்று ஏற்படுத்திக் கொண்டு விட்ட

இயக்கத் தொடர்புகளிலிருந்து ஊசிமுனையளவு கூடத் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லாதவர்களாக ஆகிவிட்டார்கள். அதேநேரத்தில், எந்தச் செயலையும் செய்யத் தயாராக இல்லாதவர்களாகி விட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் 'கொக்கின் தொண்டையில் மாட்டிக் கொண்ட கெழுத்தி மீனைப் போன்றவர்கள்' (**மீசை போல் இருபக்கமும் முள் உள்ள மீன், கெழுத்தி மீன்**) ஆகி விட்டார்கள். இவற்றையெல்லாம் எண்ணித்தான் தங்களைப் போல் புதிதாக வந்து சேருபவர்களுக்கு இதுபோல் மிகமிகப் பெரிய நெடிய விரிவான அஞ்சல்கள் ஆரம்பக் கட்டத்திலேயே தேவையான அளவு அனுப்புகின்றோம். எனவே, அன்புகூர்ந்து சிந்தித்துச் செயல்படுங்கள். தாங்கள் எந்த நிலையில் வேண்டுமானாலும் தூரத்தே விலகி நின்று கொண்டு செயல்படலாம். இதுவரை வெளிவந்துள்ள அச்சிட்ட படைப்புக்களையும், கையெழுத்துப் பிறதிகளையும் படித்துப் பாருங்கள்; விலைக்கு விற்றுத் தாருங்கள். அவற்றிற்கு மேலும் பல படிவங்கள் தயாரிப்பதற்குத் தேவையான பொருளைத் திரட்டித் தாருங்கள்.

தாங்கள் தங்கள் விருப்பம் போல், இ.ம.இ.யிலோ அல்லது அதன் கீழுள்ள 48 வகையான நிறுவன நிருவாகங்கள் சிலவற்றிலோ; வட்ட, வட்டார, மாவட்ட, மாநில அளவில் பொறுப்பேற்றுத் தலைவராகவோ, செயலாளராகவோ, அமைப்பாளராகவோ, செயல்வீரராகவோ செயல்படலாம்! செயல்படலாம்! செயல்படலாம்! அனைத்திற்கும் நீங்களே பொறுப்பாளி. தங்களுக்கு வெற்றி உண்டாக வாழ்த்துகிறோம். தங்களின் ஆர்வமும், ஆற்றலும், நல்லுறவும், நல்குரவும் வளமுறட்டும், மலர்ச்சியுறட்டும்.

5) இனிய நண்ப! யாம் எமது காலத்தில் வெற்றி பெறுவோமோ! தோல்வியுறுவோமோ! அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், யாம் எம் மீதும், எமது பாரம்பரியத்தின் மீதும், எமது கொள்கை குறிக்கோள்கள் மீதும், எமது செயல்திட்டங்கள் மீதும், எமது செயல்நிலைகள் மீதும், எம்மால் உருவாக்கப்பட்டவர்கள் மீதும்,

யாம் எழுதிக் குவித்துள்ளவைகள் மீதும், எமது அருளுலகப் பயிற்சி முயற்சி தேர்ச்சி முதிர்ச்சி முதலியவைகள் மீதும் மிகமிகத் தெளிவான, வளமான, வலிமையான நம்பிக்கை வைத்திருக்கிறோம். எனவேதான் யாம் தொடர்ந்து அல்லும் பகலும் அயராமலும், ஆர்வம் குன்றாமலும் எல்லாத் துறைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். யாம் எம் காலத்தின் உலக வரலாறாக உருவாகுகின்றோம்.

எம்மிடமுள்ள அருளுலகப் பொருளுலகச் செய்திகளால்தான் அருளுலகப் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும், குறைகளையும் அகற்ற முடியும் என்று முழுமையாக நம்புகின்றோம். அதனால்தான் யாம் எம்மால் உருவாக்கப்பட்ட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் என்போரை மேலும் மேலும் தொடர்ந்து கடுமையான பயிற்சிகளுக்கும், முயற்சிகளுக்கும், சோதனைகளுக்கும் உள்ளாக்கியே வருகிறோம். ஆனால், எத்தகையதோர் நிலை வந்தாலும், எமக்காக எதையும் செய்யக் கூடியவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பல்லாயிரக்கணக்கில் வளர்ந்து கொண்டே வருகிறார்கள். எனவேதான், யாம் **'எம்மைப்போல் எந்த அருளாளரும் இதுவரை வெற்றி கண்டதில்லை'** என்ற மகிழ்ச்சியிலும், அமைதியிலும், நிம்மதியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவற்றின் அடிப்படையிலே, எம்மால் நிதானமாகவும், சமாதானமாகவும், ஆரவாரமின்றியும், அமைதியாகவும், அடக்கமாகவும் செயல்பட முடிகின்றது.

6) யார் யார் எம்மைப் பற்றி என்னென்ன கருதுகிறார்கள் என்பதை யெல்லாம் ஓரளவு அவ்வப்போது எப்படியாவது கேள்விப்பட நேர்ந்தாலும், அவற்றைப் பற்றி ஏதும் எண்ணிப் பார்க்க நேரமில்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் யாம். இதற்குத் துணையாகத்தான் யாம், எம்மிடம் வரக்கூடிய எல்லோரையுமே அருளாளராக்கிச் செயல்படச் செய்கிறோம். ஆனால், **'விதை ஒன்றாக இருந்தாலும், நீர்வளம் நிலவளத்திற்கு ஏற்பத்தான் பயிர்கள் விளையும்'** என்பதற்கேற்ப

யாம் எவ்வளவுதான் சம நோக்கோடும் அனைவரையும் தயாரித்தாலும் எம்மிடம் உள்ளவர்களில் ஏறத்தாழ ஒரே மாதிரியான வளர்ச்சி உடையவர்களே இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. அதாவது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நெஞ்சத் தரத்திற்கும், சிந்தைத் திறத்திற்கும் ஏற்பவேதான் உருவாகுகிறார்கள். இதில் எம்மிடம் எந்தவிதமான ஒருதலைச் சார்பும் இல்லை.

பேரன்பு கூர்ந்து தாங்கள் யாம் கூறியதையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்த பின் எமது இயக்கத்தில் செயல்படத் தயாராகுங்கள்.

7) தாங்கள் முடிந்தவரை கோவை மாவட்டத்தில் தமிழ்மொழியின் அடிப்படையிலோ அல்லது தமிழ் இனத்தின் அடிப்படையிலோ, தமிழர் மதத்தின் அடிப்படையிலோ நமது இயக்கக் கிளைகளையும், நிறுவன நிருவாகங்களையும் உருவாக்குங்கள். எமது சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். எம்முடைய அருள் வழங்கு நிகழ்ச்சிகளுக்கும், கோயில் புத்துயிர்ப்பு நிகழ்ச்சிகளுக்கும் தங்கள் விருப்பம் போல் ஏற்பாடு செய்யுங்கள். ஏற்கனவே இயக்கத்திலுள்ள செயல்வீரர்களையும், செயல்நிலையங்களையும் நேரில் சந்தியுங்கள். தங்களுக்கு வசதி வாய்ப்புக்களோ, விருப்பமோ இருந்தால் புதிய அருள்வழங்கு நிலையங்களையோ, கிளை அலுவலகங்களையோ உருவாக்குங்கள். சித்தரடியார் திரு பழ.கோபால் (மேற்கு மண்டல மாதண்டநாயகம், 6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை) அவர்களையும், மேற்கு மண்டல அ.வி.தி. அமைப்பாளர் திரு R.இராமசாமி (6/447, திருவள்ளுவர் நகர், சிறுமுகை) அவர்களையும் குறிப்பாகச் சென்று சந்தியுங்கள்.

குறிப்பு:- யாம் அனுப்பியுள்ள அறிக்கைகளைக் கூடுமானவரை சிறப்பாகப் பயன்படுத்துங்கள். சுமார் ரூ.200/- வரை அனுப்பினால் இதுவரை வெளிவந்துள்ள அறிக்கைகளும், வெளியீடுகளும் அனுப்பி வைக்கப்படும்.

8) தங்களுடைய அஞ்சல்களுக்கு உடனுக்குடன் பதில் வரவில்லை என்றால் வருத்தப்பட வேண்டாம், கவலைப்பட வேண்டாம். எமது தலைமைப்பீடச் செயலகத்தாருடன் தொடர்பு கொண்டால் தங்கள் ஐயங்களுக்கு நல்ல பதில் கிட்டும். (தலைமைப்பீடச் செயலகம், 8 சண்முகம் சாலை, விசயலக்குமி நகர், கொளத்தூர், சென்னை-600099). இவ்வஞ்சலைப் பலருக்கும் படித்துக் காட்டுங்கள். இதற்குச் சில நகல்கள் எடுத்தனுப்பிடுங்கள். மற்றவை தங்கள் அஞ்சல் கண்டு.

திருவோலை நாயகம்: சுந்தரானந்தா, 8-11-1988.

**அன்பு**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்,**
**8-11-1988.**

**//உண்மை நகல்//**

**நகல் நல்குபவர்:-**
அருள்மிகு பசிய இளந்தலைகளை மாலையாகப் பூண்ட கபாலீசுவரி சன்னிதானம், அருள்மிகு திருப்பூந்துருத்தி புட்பவனநாதர் அழகாலமர்ந்த நாயகி சன்னிதானம், அருள்மிகு எருமைநாட்டு வெல்போர்க் கொற்றவை சன்னிதானம், அருள்மிகு அருட்போர்க்கால போர்க்கோல வீரமாகாளி சன்னிதானம், அருள்மிகு காஞ்சி ஏகாம்பரேசுவரர், அருள்மிகு சோழமாதேவியின் செல்லமகள் போர்க்கால போர்க்கோல தேவி தஞ்சை கருப்பழகி திருவடி, பரமாச்சாரியார், திருமந்திற ஓலைநாயகம், அருட்சேனைத் தளபதிகளுள் ஒருவர், வடபுலத்துக் கொள்கைபரப்புச் செயலாளர், ஏற்புச் செல்வன் சித்தர் மகன், சித்தரடியார் சீ.மோகன், புவனேசுவர், 10-11-1988. S.Mohan BSc., B.Tech, 28 Sahid Nagar, Bhubaneswar-751007, Orissa.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

10-11-1988.

# குருவாணைத் திருவோலை

1) அருள்மிகு பெரியாண்டவர் சன்னிதானம் திரு தியாகராசன் அவர்கள் சமூகத்திற்கும், அருள்மிகு சிவநிலை குருநிலைப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள குருதேவரின் ஏற்புச் செல்வனும், பதிலியுமான அருள்மிகு மரப்பறை அங்காள பரமேசுவரி சன்னிதானம் சித்தரடியார் இர.கங்காதரக்குமார் அவர்களுக்கும், அவர்களின் இல்லத்தார்களுக்கும், கடந்தப்பட்டி ஆதிசிவன் மலையிருக்கும் கடந்தப்பட்டி வாழ் இ.ம.இ. இயக்கத்தவர்களுக்கும், சித்தர்நெறிச் செல்வர்களுக்கும் குருவாணைத் திருவோலை தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஒப்புதலோடும், அம்மையப்பன்கள் துணையோடும் விடுக்கப்படுகின்றது.

2) தாத்தாக்கள் ஆத்தாக்கள் துணையாலும், அம்மையப்பன்கள் அருளாலும் அனைத்தும் நன்மையாகின்றன! வெற்றியாகின்றன! **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது பேரனும், அருளாட்சி நாயகமும் தத்துவ நாயகமும் ஆன 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம் செய்து முடித்த அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் எனும் அருட்போரின் வெற்றியை நிலைநாட்டவும், குருபாரம்பரிய வாசகப்படி எம் காலத்தில் விண்ணும் மண்ணும் இணைந்த அருட்பேரரசு அமையும் என்ற கருத்தை மெய்யாக்கவும்; 1359வது அண்டத்து 108 திருப்பதி அண்டங்களுக்கும், 243 சத்தி அண்டங்களுக்கும், 1008 சிவாலய அண்டங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமான அருட்பேரரசின் அரியாசனத்தை அமைத்து அதில் முறைப்படி அருட்பேரரசராக அமர்ந்திட்டார்** என்ற மகிழ்ச்சிகரமான, பயன்மிக்க, நிறைவான

செய்தியினை முதன்முதல் ஆதிசிவன் மலையிருக்கும் கடந்தப்-பட்டியினருக்குத் தெரிவித்து; அதன் வாயிலாக மற்றவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். **<u>இப்பெருமை என்றென்றும் கடந்தப்பட்டியார்களுக்கும் உண்டு.</u>** இதை மேற்கு மண்டலத்தார்களும், இராசிபுரத்தார்களும் உணர்ந்து பூரிப்பும், பெருமிதமும் அடைதல் வேண்டும்.

3) பல்வேறு வகையான காரணங்களால் வேம்படிதாளத்திலுள்ள தருகுலம் சிறப்புற முடியவில்லை. எனவே, அதனுடைய மற்றொரு அமைப்பாக, அதாவது கிளை அமைப்பாக தருகுலம் ஒன்றை அமைத்திட தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் அருளாணை வழங்கியிருக்கிறார்கள். இது விரைவில் நிறைவேற கடந்தப்பட்டியார்களும், இராசிபுரத்தார்களும், மேற்கு மண்டலத்தார்களும் ஆதரவு நல்க வேண்டும்.

**<u>குறிப்பு</u>:-** கடந்தப்பட்டி சுடலையருகில் காட்டிலாகாவைச் சேர்ந்த நிலங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றில் நாம் தருகுலம் அமைக்கக் குறைந்தது 2 ஏக்கர் கூடுதலாக 5 ஏக்கர் தேவை. அதைப் பயன்படுத்தி அதன் பின்னர் பட்டா வாங்க முடியுமா? என்பதைப் பற்றி யோசிக்கவும். அங்கு விரைந்து தருகுலப் பயிற்சிக்குரிய பள்ளிகள், தவச்சாலைகள், அருள்வழங்கு நிலையங்கள் அமைக்கலாம்.

4) மேற்கு மண்டலத்தில் தமிழ்மொழிக்கு எனவும், தமிழ் இனத்துக்கு எனவும், தமிழர் மதத்திற்கெனவும், பொதுவாக அருள் உலகத்திற்கு எனவும், (தத்துவத்திற்கு) அரசியல் மறுமலர்ச்சிக்காகவும் தனி மன்றங்கள் ஆங்காங்கே தோற்றுவிக்க முயலுங்கள். நமது இ.ம.இ., அ.வி.தி., தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள், இளைஞரணி முதலியவற்றில் உறுப்பினர்களைச் சேர்க்க முயலுங்கள்.

**குறிப்பு:-** எமது சுற்றுப்பயணம் இயக்கப் பூர்வமாக அமைய இயலாது சிறிது காலத்திற்கு. எனவே, தனிமனிதர்களின்

விருப்பத்திற்கேற்ப மேற்கு மண்டலத்தில் எமது சுற்றுப்பயணங்கள் அமையும். எனவே, இதைப்பற்றி யாரும் தமக்குத் தெரிவிக்கவில்லை என்று வருத்தப்பட வேண்டாம். எமது சுற்றுப்பயணத்தினுல் எந்த ஒரு தனிமனிதருக்கும் முதன்மை தரப்படுவதாக போட்டி பொருமைகள் தேவையில்லை. நமது இயக்கத்தை வளர்க்கவே தனிப்பட்ட முறையில் யாம் சுற்றுப்பயணம் வருகிறோம். இதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

5) எமக்கு கடந்தப்பட்டியிலிருந்து அனுப்பிய சாயம் போட்ட வேட்டிகள் பயன்படுகிறது என்பதால், 12 நான்கு முழ வேட்டிகளும், 2 ஆறு முழத் துண்டுகளும் தேவை. இவை உடனடியாக வாங்க முன்பணமாக ரூ.150/-ஐ திரு ச.அண்ணுமலையிடம் கொடுத்து விடுகிறோம். மீதிப்பணம் தேவைப்பட்டால் உடனடியாக M.O. அனுப்புகிறோம். இல்லையெனில், இர.கங்காதரக்குமாரிடம் வாங்கிக் கொள்ளலாம். (கங்காதரக்குமாரை கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்). ரூ.300 அவர் அனுப்பியது பற்றி விவரம் தெரிந்ததும் எழுதுகிறோம்.

<u>திருவோலை நாயகம்:</u>

காஞ்சி ஏகாம்பரேசுவரர், ஈசுவரர் நிலை பெற்றேன், சித்தரடியார்
சீ.மோகன்,
10-11-1988.

**//உண்மை நகல்//**

**நகல் நல்குபவர்:-**
**அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, தருகுலக் காப்பாளர், சித்தரடியார் சீ.மணி, 11-11-88.**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

தலைமைப்பீடம்,
24-11-1988.

# அண்டபேரண்ட அருட்பேரரசராக தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா முடிகூட்டிக் கொள்தல்

அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம், சேரப் பெருமண்டல அருட்பணி மாதண்ட நாயகம், சித்தரடியார் திரு பழ.கோபால் அவர்களுக்குக் குருதேவர் விடுக்கும் திருமடல்:

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் 1359வது அண்டத்தில் தமது வெற்றியை நிலைநாட்டி அண்டபேரண்ட அருட்பேரரசராக முடி சூட்டிக் கொண்டார். அவர் ஆயாள் பொன்னிறப் பாவையுடனும், ஆயாக்கள் பல்லவ இளவரசிகளுடனும், பல நூற்றுக்கணக்கான அண்டபேரண்ட உதவியாளர்களுடனும், ஏராளமான இயந்திரங்களுடனும் தஞ்சையிலேயே வந்து தங்கியிருக்கிறார். தமிழகம் முழுவதும் புத்துயிர்ப்புப் பணியும், இந்தியா முழுவதும் அருளுலகத்தவர்களைத் தட்டியெழுப்பும் பணியும் காட்டுத் தீ போல வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. அடிக்கடி நேரடியாக குருதேவர் எங்கிருந்தாலும்

தாத்தா வந்து சந்திக்கிறார். குருதேவரின் தந்தை சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளையவர்களுடனும் கலந்தே இன்றைய உலகியலுக்கு ஏற்ப குருவாணையையும், அருளாணையையும், செயல்திட்டங்களையும் வழங்குகிறார். எனவே, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு நம்மவர்கள் எல்லோரும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக இருக்கும் நமது குருதேவரின் இ.ம.இ., அ.வி.தி., தமிழின மொழி மத விடுதலை இயக்கம், இளைஞர் அணி, அருட்கோட்டங்கள், வார வழிபாடுகள், சுடலைப் பூசைகள், தனிமனித சித்திப் பூசைகள், ... முதலியவற்றையெல்லாம் பேரார்வத்துடன் செயல்பட்டு தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அன்பையும், ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அருளாட்சி அமைவது உறுதி! உறுதி!! உறுதி!!!

**<u>குறிப்பு:-</u> தாத்தாக்களையும், ஆத்தாக்களையும் நம்பி புதியவர்களுக்கு நமது அறிக்கையை கொடுங்கள். அருள் வழங்குங்கள். மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றுங்கள். உறுப்பினர்களாகச் சேர்த்திடுங்கள்.**

3) நம்மவர்களுக்குள் ஒற்றுமையும், பற்றும், பாசமும், தோழமையும், நட்பும் மிகுதியாக இருக்க வேண்டும். உலகியல் காரணங்களான தகராறுகள், போட்டி பொறாமைகள், வம்பு வீம்புகள், கடும்பகைகள், வெறுப்புக்கள், ... முதலியவைகளையெல்லாம் மறந்தும், துறந்தும், கைவிட்டும் கூடுமானவரை பொருட்படுத்தாமல் எல்லாவற்றையும் அனுசரித்து செயல்படக் கற்றுக் கொள்ளுங்கள்! செயல்படக் கற்றுக் கொள்ளுங்கள்!! செயல்படக் கற்றுக் கொள்ளுங்கள்!!!

4) இந்த ஐநூறு கோடியாண்டுகளில் விண்ணையும், மண்ணையும் இணைக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அருட்கொடை வள்ளல் நமது குருதேவர்தான் எல்லோருக்குமே அருள் வழங்குகிறார். கூலிக்காரர்களும், பேராசைக்காரர்களும், கருமிகளும், பொதுநோக்கற்றவர்களும்

ஒதுங்குவதையும், பதுங்குவதையும், விலகுவதையும் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

5) **“என்றைக்குமே கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், அறிவிருந்தும் மூடராய், வாயிருந்தும் ஊமையாய், வசதியிருந்தும் ஏழையாய், ... வாழக் கூடியவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அருள் ஆறாக ஓடினாலும் சரி, மழையாக பெய்தாலும் சரி, அருள் நீர்த்துளி தன்மீது படாமல் பதுங்கி, ஒதுங்கி, விலகி வாழக்கூடிய பாவிகளும், சபிக்கப்பட்டவர்களும், பொல்லா சினமுடையவர்களும், வம்புக்காரர்களும், வீம்புக்காரர்களும், தான் என்ற தற்பெருமைக்காரர்களும், அகம்பாவக்காரர்களும், ஆணவக்-காரர்களும் இருக்கத்தான் செய்வார்கள்! இருக்கத்தான் செய்வார்கள்!! இருக்கத்தான் செய்வார்கள்!!! இப்படிப்பட்டவர்களுக்கு இடையிலேயேதான் அருட்பணி ஆற்ற வேண்டியிருக்கும். அதனால்தான், அருட்பணி ஆற்றுபவர்கள் எப்பொழுதுமே கூட்டமாக இணைந்தும், ஒரே தலைமைக்கு கட்டுப்பட்டும், தெளிவான செயல்திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டுதான் செயல்பட வேண்டும்....”** இந்தக் குருபாரம்பரிய வாசகத்தைத்தான் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் செயலாக்கினார்கள். அதையேதான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய நமது குருதேவரும் செயலாக்க முற்படுகிறார்.

6) ஆனால், இவர் தன்னிடம் வருபவர்களை முறைப்படி; படிப்படியாக பல்வேறு வகையான சோதனைகளுக்கு உள்ளாக்கி, அவரவருக்குள்ள பக்குவத்திற்கு ஏற்ப ஆதரவாளர், ஏந்தாளர், உதவியாளர், விருப்பாளர்; பொதுவான சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார்கள்; அருட்கலைகளில் அடிப்படையானவை, நடுத்தரமானவை, மேல்நிலைக்குரியவை, முழுமைக்குரியவை, ... என்று ஒவ்வொரு நிலைகளையும் பெறக் கூடியவர்கள்; என்று பிரித்தே வகைப்படுத்தி

தயாரிக்கிறார். அப்பொழுதுதான் தன்னால் முழுமையாக நம்பப்படக் கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்பதைத் திட்டவட்டமாக கணக்கிட்டுக் கொண்டு, அதற்கேற்ப அருளாட்சி அமைப்புப் பணியின் திட்டங்களை வகுப்பார், செயல்நிலைகளை அறிவிப்பார். ஒருவேளை தாம் எதிர்பார்க்கின்ற வலிமையான, வளமான ஆட்கள் கிடைக்காவிடில்; கூடுமானவரை அனைத்தும் வாழையடி வாழையாகவாவது வளர்ந்து விரைவில் தமிழின மொழி மத விடுதலையும்; உலக ஆன்மநேய ஒருமைப்பாடும்; உலக சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும்; உலகம் தழுவிய அருளாட்சியும், ... செழிப்பாக விளைந்திட்டாலே போதும்! விளைந்திட்டாலே போதும்!! விளைந்திட்டாலே போதும்!!! என்று செயல்பட்டு நிறைவு பெற்று; நீள் தவத்தில் ஆழ்ந்திடுவார். அவ்வளவுதான்.

7) எனவே, நம்மவர்கள் அவரவரால் உலகியலையும், சொந்தபந்த பாசங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், அச்ச கூச்ச மாச்சரியங்களையும், தன்னலங்களையும், சந்தேகங்களையும், ... விட்டொழித்து குருதேவரோடு இரண்டறக் கலந்து பெறற்கரிய பெரிய நிலைகளையெல்லாம் பெறலாம். அல்லது அவரவருக்கு போதும் என்று தெரிகின்ற எந்த நிலையில் வேண்டுமானாலும், எவர் வேண்டுமானாலும் நின்று கொள்ளலாம்! நின்று கொள்ளலாம்!! நின்று கொள்ளலாம்!!! அதற்காக குருதேவர் யார் மீதும் வருத்தப் படுவதோ, கோபப்படுவதோ மாட்டார். ஏனென்றால், அவரவர் விதிப்படியும், ஊழ்வினையின் படியும்தான் எவருமே பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளை பெற முடியும்.

மேலும் பீடாதிபதிகளிடம் அறிமுகம் பெறுவதும், நெருங்கிப் பழகுவதும், அவருடைய அன்பையும், ஆதரவையும் பெறுவதும், பீடாதிபதிகளாலேயே இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெறுவதும்

எல்லோருக்கும் எளிதல்ல! எளிதல்ல!! எளிதல்ல!!! இவற்றிற்கெல்லாம் மேலாக தீய பேய் பிசாசுகளும், அருளுலக கண்காணிப்பாளர்களும், இந்திரன் சபையில் உள்ள ஆட்சியாளர்களும்; பலபேர் பீடாதிபதிகளின் அருளை மிகுதியாகப் பெற்று விடாமல் தடை செய்து கொண்டே-யிருப்பார்கள்.... இவற்றை யெல்லாம் எண்ணித்தான் நமது குருதேவர் யார் எப்பொழுது வந்தாலும், வருக என வரவேற்றுச் செயல்படுகிறார்; யார் எப்பொழுது எதைச் சொல்லி குருதேவரை விட்டு ஒதுங்கினாலும் அல்லது பதுங்கினாலும் அல்லது விலகினாலும், ... அவர்கள் தங்கள் விருப்பம் போல் விலகியிருக்குமாறு விட்டு விடுகிறார். யார் எப்பொழுது, எதற்காகவும் குருதேவரிடம் வந்தாலும் கூட; உடனடியாக குருதேவர் முகமலர்ச்சியுடனும், முழுமனதுடனும் அவர்களை வருக வருக என்று ஏற்றுக் கொள்ளுகிறார்.

அதாவது, நமது குருதேவர் யாரையும் துரோகியாகவோ, விரோதியாகவோ நினைப்பது இல்லை. இவற்றை யெல்லாம் இப்பொழுது தலைமைப்பீடம் மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும்; இதுபோல் ஒரு சில தனிமனிதர்களுக்கு எழுதக் கூடிய அஞ்சல்களில் எழுத நேரிட்டிருக்கிறது! எழுத நேரிட்டிருக்கிறது!! எழுத நேரிட்டிருக்கிறது!!! ஏனென்றால், நமது குருதேவர் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிற்காவது; கணிசமான எண்ணிக்கையினரை தமது முழுமையான நம்பிக்கைக்கு உரியவர்களாக்கித் தம்மால் முழுமையாக அருளுலகில் தயாரிக்கப்பட வேண்டும்; அப்பொழுதுதான் அருட்பணி விரிவாக்கத் திட்டமும், அருளாட்சி அமைப்புப் பணியும் குறுகிய கால அளவில், விரிந்த அளவில், பரந்த வளர்ச்சியினையும், வலிமையான வெற்றிகளையும் பெற முடியும் என்று எதிர்பார்க்கின்றார். எனவே, தாங்கள் இந்த அஞ்சலுக்கு தங்களால் முடிந்தவரை கார்பன் நகல்கள் 10 அல்லது 15ஆவது அனுப்புங்கள். பேறு நகல்கள் 4 அல்லது 5ஆவது அனுப்புங்கள். அல்லது வசதிப்பட்டால் cyclostyle செய்து அனுப்புங்கள்.

**இந்த அஞ்சல் வரலாற்று முக்கியத்துவமான அஞ்சலாகும். இது உங்களுக்கு எழுதப்படுவதால் வரலாற்று முதன்மையையும், சிறப்பையும், பெருமையையும் பெறுகிறீர்கள்! பெறுகிறீர்கள்!! பெறுகிறீர்கள்!!!**

இந்த அஞ்சலை பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து முடிந்தவரை புரிந்து கொள்ள முற்படுங்கள். புரிந்தவரை செயல்பட முற்படுங்கள்.

அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

ஓம் திருச்சிற்றம்பலம்.

**தலைமைப்பீடம்,**
**குருதேவர் இல்லம்.**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**24-11-88.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருக்க, இறுதியில் குருதேவரின் கையொப்பம் இடப்பட்டிருந்தது.//**

# <u>சித்தரடியானுக்கு வழங்கிய குருபாரம்பரிய வாசகங்கள்</u>

"ஞானநிலை பெறுவதற்காக மிட்டாய்க் கடை முன்னால் நிற்கும் சிறுவர்கள் போலவோ, அன்றி பட்டுக்கடை முன் ஏக்கத்தோடு நிற்கும் மங்கையர் போலவோ தங்களது நிலை அறியாமல் உணர்வு வயப் பட்டிடுபவர்களால்; **<u>எதையுமே!</u>** **<u>என்றைக்குமே</u>**! முழுமையாக எய்திட இயலாது! இயலாது!! இயலாது!!! இயலவே இயலாது!!!!"

***- குருபாரம்பரிய வாசகம்.***

"அவசரத்தாலோ, அவசியத்தாலோ பால் கறக்கும் மாட்டை ஏரில் பூட்டி உழுது விட்டால் பிறகு அது இரண்டிற்கும் சரியாகப் பயன்படாது. அதுபோல், அருளுணர்வு உள்ளவர்கள் பொருள் வெறியாலோ, புகழ் வெறியாலோ அவசரப்பட்டு குருதேவரையோ, தங்கள் அநுபவங்களையோ பொருட்பசியின் தாகமும், வெறியும் உடைய பொருளுலகத்தார்களுக்கு இடையில் அறிமுகப்படுத்தி விட்டால் பிறகு தனது அருளுலக அநுபவங்களும் பயன்படாது, குருதேவரும் அவனுக்குப் பயன்பட மாட்டார்."

***- குருபாரம்பரிய வாசகம்.***

**//குருதேவர் 27-6-1988இல் நாமக்கல் சித்தரடியானுக்கு எழுதிய அஞ்சலில் இருந்த குருபாரம்பரிய வாசகங்களில் சில.//**





தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில், சடங்குகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை ரூ.10/-